# தமிழ் வளர்ச்சியில் கிறித்தவக் காப்பியங்களின் பங்களிப்பு

**சி.ஜீசஸ் ராயர்**

**தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்,**

Jesusrayar1997@gmail.com,

**33**

**ஆய்வுச் சுருக்கம்:**

தமிழ் இலக்கிய மரபில் காப்பிய மரபு என்பது நீண்ட வரலாற்றினைக் கொண்ட மரபாகும் ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள் ஆகியவை காப்பிய மரபின் சிறப்புக்குரிய நிலைக்களன்களாகும். காப்பிய மரபின் உருவாக்கத்திற்குச் சமயங்களின் பின்னணியும் பங்களிப்பும் மிக முக்கியமானதாக அமைகிறது. ஏனெனில் நாம் ஐம்பெரும் காப்பியங்களையும் ஐஞ்சிறு காப்பியங்களையும் சமண பௌத்த காப்பியங்கள் என்று வகைப்படுத்தி காண்கிறோம். அந்த வகையில் பதினெட்டாம் நூற்றாண்டின் இலக்கியப் பரப்பில் தளர்விடத் தொடங்கிய கிறித்தவச் சமயம் பழந்தமிழர் காப்பிய வகைமையையும் தனதாக்கி கிறித்தவ காப்பியங்களை படைக்க தொடங்கியது. அதிலிருந்து ஒரு நீண்ட மரபினை கிறித்தவக் காப்பியங்கள் கொண்டிருக்கின்றன. காப்பியக் கட்டமைப்பு மரபின் நீட்சியை இன்றளவும் பயன்படுத்தும் நிலையில் கிறிஸ்தவ காப்பியங்கள் உருவாகி வருவது தமிழ் வளர்ச்சிக்கு முக்கியப் பங்களிக்கிறது. இவ்வாறாக கிறித்தவக் காப்பியங்கள் தமிழ் வளர்ச்சிக்கு எத்தகைய பங்களிப்பினை நல்கி இருக்கிறது என்பதை ஆராய்வதே இவ் ஆய்வாகும்

**திறவுச் சொற்கள்:**

தமிழ்க் காப்பியங்கள் - கிறித்தவக் காப்பியங்கள்- காப்பிய இலக்கியம்-தமிழ் வளர்ச்சி- காப்பிய மரபு

**முன்னுரை**

தொன்மையான இலக்கிய வடிவங்களில் காப்பியமும் ஒன்றாகும்."காப்பியம் ஆங்கிலத்தில் Epic என்று சொல்லப்படுகிறது. ஆங்கிலச் சொல்லான Epic என்பது Epos என்ற கிரேக்கச் சொல்லின் அடியாக தோன்றியது. Epos என்றால் வீர மரபு செயல்களை சிறப்பிக்கும் ஆதி காலத்து எழுத்து வடிவத்தில் இல்லாத கதை உரை கவிதை என்று பொருளாகும். வீரகாவியம் காப்பியம் பெருங்காப்பியம் தொடர்நிலைச் செய்யுள் என்று தமிழில் காப்பியம் வழங்கப்படுவதுண்டு"(தமிழில் காப்பியக் கொள்கை பக்.9).இவ்வாறாக காப்பியத்திற்கான வரையறை அமைந்துள்ளது.

காப்பியங்கள் வழி ஒரு தனிமனிதனது அல்லது சமுதாயத்தினது வாழ்வியல் முழுமையும் அறிய முடிகிறது எனலாம். காப்பியத்தின் வடிவமும் நோக்கமும் திரண்ட செய்திகளை எடுத்துக் கூறும் வகையில் அமைந்துள்ளது. தமிழ் இலக்கிய வகைமைகளுள் காப்பியத்திற்கென்றே சில தனித்த கூறுகளும் அதன் உள்ளடக்க முறையில் கட்டுப்பாடுகளும் இருக்கின்றன. இதற்குச் சான்றாக, யாப்பியல் முறைகளையும் காப்பிய இலக்கணக் கூறுகளையும் கூறலாம். இத்தகைய பண்புடைய

காப்பிய மரபில் கிறித்தவக் காப்பியங்களும் தோன்றியுள்ளன.அவற்றால் தமிழ் வளர்ச்சி அடைந்துள்ள தன்மையினைக் குறித்து இக்கட்டுரையில் காண்போம்

**காலந்தோறும் காப்பிய மரபு**

"காப்பியம் என்பது நால்வகை உறுதிப் பொருளையும் கூறுவதாய் கதை பற்றி வரும் தொடர்நிலைச் செய்யுள்" என தமிழ்ப் பேரகராதி விளக்கம் கூறுகிறது தமிழ் இலக்கிய மரபில் காப்பியங்கள் என்பது தலைவனின் வரலாற்றைக் கூறும் இலக்கியம் என்று வழங்கப்படுகிறது. காப்பியத் தலைவன் ஒருவனையோ பலரையோ பற்றி பாடுபொருளாகக் கொண்டு அறம், பொருள், இன்பம் வீடு என்னும் நாற்பொருளையும் பயப்பதாக அமையும். தமிழ் இலக்கியங்களில் ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள் ஆகியவை காப்பிய பாடுபொருள் மரபாக காணப்படுகின்றன. சிலப்பதிகாரத்தின் காலமாக கி.பி இரண்டாம் நூற்றாண்டினைக் குறிப்பிடுவர். அதனை அடுத்து ஐம்பெரும் காப்பியங்களில் இடம்பெற்று இருக்கக்கூடிய மற்றக் காப்பியங்களும் ஐஞ்சிறு காப்பியங்களும் இடம்பெறுகின்றன.

தண்டியலங்காரம் காப்பியத்திற்கான இலக்கணத்தை குறிப்பிடுகின்றது. இது முழுமையான இலக்கண மரபு என்று கொள்ள முடியாது எனினும் கிடைத்திருக்கக்கூடிய இலக்கண மரபாக தண்டியலங்காரத்தின் காப்பிய இலக்கணம் கிடைத்திருப்பதால் அதனை நாம் பொருத்தி காண்பது ஓரளவு ஏற்புடையதாக இருக்கும் நமக்கு கிடைத்திருக்கக் கூடிய ஐம்பெரும் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள் ஆகியவை யாப்பு முறைமையில் ஆசிரியப்பாவையும் விருத்தத்தையும் கொண்டு அமைய பெற்றிருக்கிறது. இத்தகைய காப்பிய மரபு தொடர்ச்சியாக பதினெட்டாம் நூற்றாண்டு தொடங்கி இன்றைய இருபத்தியோராம் நூற்றாண்டு வரையிலும் கிறித்தவ இலக்கிய மரபிலும் நிலவி வருவது காப்பிய மரபிற்குக் கிடைத்திருக்கக் கூடிய பெருமையாகும்

**கிறித்தவக் காப்பிய அறிமுகம்:**

தமிழ் இலக்கிய வரலாற்றில் கிறித்தவ இலக்கியம் தனித்த நிலையான இடத்தை பெற்றுள்ளது. கிறித்தவ இலக்கியத்தின் சிறப்புகள் அறிஞர்கள் பலராலும் பாராட்டப்பட்டுள்ளன. கிறித்தவ இலக்கிய வகைகளில் காப்பியம் என்பது குறிப்பிடத்தக்கது. கிறித்தவக் காப்பியத்திற்கு அடிகோலியவர் வீரமாமுனிவர் ஆவார். வீரமாமுனிவரில் இருந்து தமிழ்க் கிறித்தவக் காப்பிய மரபு என்பது தொடங்குகின்றது. கிறித்தவக் காப்பியங்களின் எண்ணிக்கையை கிறித்தவக் காப்பியங்கள் எனும் நூல் பின்வருமாறு வகைப்படுத்துகிறது.

1. தேம்பாவணி வீரமாமுனிவர் (1726)
2. யோசேப்புப் புராணம் - கூழங்கைத் தம்பிரான்
3.கிறிஸ்தாயனம்- ஜான்பால்மர் (1865)
4. ஞானாதிக்கராயர் காப்பியம்- சாமிநாதர் (1865)
5. திருவாக்குப் புராணம் - கனகசபைப் புலவர் (1866)
6.ஞானானந்த புராணம் - தொம் பிலிப்பு நாவலர் (1874)

7. அர்ச் சவேரியார் காவியம் – அந்தோனிமுத்து (1877)
8. பூங்காவனப் பிரளயம் - சாமுவேல் வேதநாயகம் தாமஸ் (1887)
9. கிறிஸ்து மான்மியம் - ஸ்தொஷ் ஐயர் (1891)
10. இரட்சணிய யாத்திரிகம் - எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை (1894)
11. சுவிசேட புராணம் - சுகாத்தியர் (1896)
12. திருச்செல்வர் காவியம் - பூலோகசிங்க அருளப்ப நாவலர்(1896)
13. திருஅவதாரம் - மாணிக்கவாசகம் ஆசீர்வாதம் (1944)
14.இரட்சகராகிய இயேசு நாதர் - ஞானாபரணம் (1950)
15. நசரேய புராணம் - ஜே.எஸ். ஆழ்வார் பிள்ளை
16.சுடர்மணி- ஆரோக்கியசாமி (1976)
17. இயேசு காவியம் - கண்ணதாசன் (1981)
18. அருளவதாரம் - வி மரிய அந்தோனி (1983)
19. மீட்பதிகாரம் - பவுல் இராமகிருட்டிணன் (1986)
20. இயேசு புராணம் - ஈழத்துப் பூராடனார் (1986)
21. எஸ்தர் காவியம் - இராபின்சன் குரூசோ (1955)
22. மோட்சப்பயணக் காவியம் - ஏ.த. ஜோதிநாயகம் (1991)
23. அன்னை தெரேசா காலியம் - துரை, மாலிறையன் 1996)
24. அருள்நிறை மரியம்மைக் காவியம்-துரை. மாலிறையன்(1996)
25. அருட்காவியம்- மதலை முத்து (1999)
26. மீட்பரசி - லோட்டஸ் எடிசன் (2002)
27. பவுலடியார் பாவியம் - ம.யோவேல் (2003)
28. உலகஜோதி - இறையரசன் (2005)
29. திருத்தொண்டர் காப்பியம் - சூ. இன்னாசி (2007)
30.ஆதியாகம காவியம் - சா.சாமிமுத்து (2008)

இவ்வாறாக கிறித்தவக் காப்பியங்கள் பதினெட்டாம் நூற்றாண்டு தொடங்கி இருபத்தியோராம் நூற்றாண்டு வரையிலும் வளர்ச்சி பெற்று வந்திருக்கின்றது.

**தமிழ் வளர்ச்சியில் கிறித்தவக் காப்பியங்களின் பங்களிப்பு**

ஒரு இலக்கிய வகைமை என்பது காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டே இன்றளவும் வழக்கில் இருக்கும் இலக்கிய வகைமையாக திகழ்வது மிகவும் சிறப்புக்குரிய ஒன்றாகும். அவ்வாறு இருக்கின்ற போது அம்மொழியில் உள்ள இலக்கண இலக்கிய வளங்களை நீண்ட மரபாக எடுத்துச் சொல்வதற்கும் அவற்றினை கடைப்பிடிப்பதற்கும் ஏற்புடையதாக அமையும். அந்த வகையில் கிறித்தவக் காப்பியங்களின் மரபு என்பது காப்பிய மரபினுடைய தொடர்ச்சியாக பதினெட்டாம் நூற்றாண்டில் தேம்பாவணியில் இருந்து தளிர் விட்டு இன்றைய இருபத்தியோராம் நூற்றாண்டின்

ஆதியாகம காவியம் வரை தொடர்வது காப்பியத்தின் செழுமையை மட்டுமல்லாது தமிழின் யாப்பியல் சிறப்பையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

ஒரு மரபின் நீட்சியை சமகாலம் வரை எடுத்து செல்லும் ஊடகமாக இலக்கிய வெளியில் கிறித்தவ காப்பியங்கள் திகழ்கின்றன. சமகாலத்தில் உரைநடை இலக்கியங்கள் புதுக்கவிதைகள் என நவீன இலக்கிய மரபு செல்வாக்கு பெற்று இருக்கின்ற போதிலும் பழைய யாப்பு முறைமைக்கு உட்பட்ட காப்பியங்கள் தோன்றுவது என்பது அந்த மொழிக்கு அதன் தொன்மைக்கு இலக்கண கட்டமைப்பிற்கு செழுமை சேர்ப்பதாகவும் மொழிக்கு வளம் சேர்ப்பதாகவும் அமையும். அந்த வகையில் கிறித்தவக் காப்பியங்கள் யாப்பியல் முறைமையில் அமைந்திருப்பது என்பது சிறப்புக்குரியதாகும்.

கிறித்தவக் காப்பியங்களில் பின்பற்றப்பட்டுள்ள பகுப்பு முறை என்பது மிகவும் சிறப்புக்குரிய ஒன்றாகும். காண்டம்,படலம்,பருவம்,சுருக்கம்,சாரல்,அடங்கன், மூர்த்தி,பாகம் என்னும் பகுப்பு முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. இவற்றில் புதிய முறைமைகளாக சாரல், அடங்கன், மூர்த்தி என்பவை அமைந்துள்ளமை காப்பியங்களில் புதிய பகுப்புகளை கொண்டுவர இயலும் என்பதை உணர்த்துகிறது. புதிய பகுப்புகள் அமைவது வளர்ச்சி நிலையினை எடுத்துக் காட்டுவதாய் உள்ளது.

தமிழிலக்கியங்களின் தாக்கங்கள் கிறித்தவக் காப்பியங்களில் இடம் பெறுவதாய் உள்ளன. “தேம்பாவணியிலும் இரட்சணிய யாத்திரிகத்திலும் கம்பராமாயணத்தின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. இரட்சணிய யாத்திரிகத்தில் எழுபது இடங்களிலும் திருத்தொண்டர் காப்பியத்தில் தொண்ணூற்றைந்து இடங்களிலும் திருக்குறளின் தாக்கங்கள் இருக்கின்றன. இரட்சணிய யாத்திரிகத்தில் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட இடங்களிலும் திருத்தொண்டர் காப்பியத்தில் இருநூற்றம்பதிற்கும் மேற்பட்ட இடங்களிலும் பழமொழிகள் இடம் பெறுகின்றன. திருத்தொண்டர் காப்பியத்தில் சூ.இன்னாசி அவர்கள் ஏறத்தாழ இரண்டாயிரம் உவமைகளை பயன்படுத்தி உள்ளார்” (கிறித்தவக் காப்பியங்கள் பக்.497). இதன் மூலம் தமிழிலக்கியத்தின் செல்வாக்கு கிறித்தவக் காப்பியங்களில் இடம்பெறும் தன்மை உணரப்படுவதாய் உள்ளது.

இரட்சகராகிய இயேசு நாதர் என்னும் காப்பியத்தில் நாசரேத்துக்கும் எருசலேமுக்கும் இடையில் உள்ள வழியின் இயல்புகளை விளக்கும்போது தமிழகத்தில் உள்ள கிராமங்களுக்கு நடுவில் உள்ள வழிகளை வர்ணிப்பது போன்ற தோற்றத்தை கொடுக்கும் அளவிற்கு தமிழ் மரபிலிருந்து மாறாமல் காப்பிய ஆசிரியர்கள் கிறித்தவக் காப்பியம் படைத்துள்ளனர்

“ஏருழும் உழவர் ஓசை எங்குமே நனி முழங்கும்
பாருறும் பறவை எல்லாம் பாடி நன்றாய் முழங்கும்
ஊரடை சோலை வண்டும் ஓய்விலாதே முழங்கும்
நேர்மலை அருவி எங்கும் நிறைந்து கல்லென முழங்கும்”
(இரட்சகராகிய இயேசுநாதர் பா.47)

இதன் மூலம் பொருண்மைக்கு ஏற்ப வலியுறுத்தப்பட வேண்டிய இடங்களில் எல்லாம் தமிழ் மரபும்,சிந்தனையும் வெளிப்படுவதாய் கிறித்தவக் காப்பியங்கள் அமைந்துள்ளன. இவ்வாறு தமிழ்

மரபுச் சிந்தனையை நிலைப்படுத்தும் நிலக்களன்களாக கிறித்தவ காப்பியங்கள் அமைந்துள்ளன.

**முடிவுரை:**

தமிழ்க் காப்பிய மரபில் இருந்து தான் கிறித்தவக் காப்பிய மரபு என்பது தோற்றம் பெற்றுள்ளது. கம்பராமாயணம், சீவக சிந்தாமணி இவற்றின் தாக்கங்களால் தான் வீரமாமுனிவர் காப்பியம் இயற்றத் தொடங்கினார் என்பர். அவ்வகையில் தோற்றம் பெறத்தொடங்கிய கிறித்தவக் காப்பியங்கள் தமிழ் வளர்ச்சியில் காப்பிய பகுப்பின் புதிய முறைமைகளாக சாரல், அடங்கன், மூர்த்தி என புதிய மரபுகளைத் தந்திருக்கிறது. அதே நேரத்தில், யாப்பியல் எனும் தமிழிலக்கிய மரபையும் திருக்குறள், கம்பராமாயணம் வழி பெற்ற தமிழ்ச் சிந்தனை மரபையும் நகர் வர்ணனையில் தமிழ்ச் சூழல் வர்ணனையும் கிறித்தவ காப்பியங்கள் தன்னகத்தே கொண்டுள்ளது. மேனாட்டார் இலக்கிய வகைமைகளில் தமிழ்ச் சிந்தனைகளை வளர்க்கும் நவீன இலக்கிய காலத்திலும் கூட தமிழ் இலக்கிய மரபான காப்பிய மரபினைப் பேணும் வகையில் புதியன புகுத்தி கிறித்தவக் காப்பியங்கள் தமிழ் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கின்றது. மேலும், மேனாட்டார் பொருண்மைகளையும் கிறித்தவ காப்பியங்கள் தமிழ்ப்படுத்தியிருக்கிறது. சான்றாக மொழிபெயர்ப்புக் காப்பியங்களைக் குறிப்பிடலாம். இவ்வாறாக பல்வேறு நிலைகளில் கிறித்தவக் காப்பியங்கள் தமிழ் வளர்ச்சியில் பங்காற்றியுள்ளன.

**துணைநூற்பட்டியல்:**

1. சீனிச்சாமி.து. தமிழில் காப்பியக் கொள்கை (முதற் பகுதி), தமிழ்ப்பல்கலைக்கழகம்,தஞ்சாவூர்.1994
2. ஜானசந்திர ஜான்சன்.யோ.,கிறித்தவக் காப்பியங்கள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை.(2013)
3. ஞானாபரணம் பண்டிதர், இரட்சகராகிய இயேசுநாதர்,இலண்டன் மிஷன் அச்சகம்,நாகர்கோவில்.(1951)
4. தமிழ்ப்பேரகராதிhttps://dsal.uchicago.edu/cgi-bin/app/tamil-lex_query.py?qs=காப்பியம்&matchtype=default